ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1955/22 - 2016 පෙබරවාරි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.02.25
*1955/22 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் நியதிகளின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட 2015.11.20 ஆந் திகதிய 1941/ 41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் பகுதி I, இலக்கம் 14 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்பு தொடர்பான ஏற்பாடுகளுக்கு பகரமாக பின்வரும் இலக்கம் 14(அ) மற்றும் (ஆ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பதிலீடு செய்தும் பின்வரும் இலக்கம் 17 மற்றும் 18 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்கியும் அவ்வட்டவணையின் பகுதி I, 2016.02.11 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வண்ணம் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

2.

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 14. (அ)<br><br>பிரதேச செயலாளர்கள் | உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப **வருடாந்த** இடமாற்றம் செய்தல்<br><br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் |

---

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 14. (ஆ)<br><br>மேலதிக மாவட்ட செயலாளர்கள் உதவி மாவட்ட செயலாளர்கள் உதவி பிரதேச செயலாளர்கள் (அமைச்சுக்கு உள்ளே) | உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப இடமாற்றம் செய்தல்<br><br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் |
| 17. கணக்காய்வாளர் திணைக்களத்தின்,<br><br>(அ) இலங்கை கணக்காய்வுச் சேவை உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) இலங்கை கணக்காய்வு பரிசோதகர் சேவைக்குரிய இல. 06/ 2006 எனும் பொது நிர்வாக சுற்றறிக்கையின் (பின்னிணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதியுயர் தர/ விசேட தர உத்தியோகத்தர்கள் | கணக்காய்வாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப இடமாற்றம் செய்தல்<br><br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் |
| 18. கணக்காய்வாளர் திணைக்களத்தின்,<br><br>(அ) அதியுயர் தர/ விசேட தர உத்தியோகத்தர்கள் தவிர்ந்த, இல. 06/2006 எனும் பொது நிர்வாக சுற்றறிக்கையின் (பின்னிணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்டத்திற்குரிய இலங்கை கணக்காய்வுப் பரிசோதகர் சேவை உத்தியோகத்தர்கள் | கணக்காய்வாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு ஏற்ப நியமனம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல்<br><br>(II) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப இடமாற்றம் செய்தல்<br><br>(III) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கமும் |

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| (ஆ) இணைந்த சேவைகளைச் சாராத இல. 06/2006 எனும் பொது நிர்வாக சுற்றறிக்கையில் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்டம் மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | | |

3. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட 2015.11.20 ஆந் திகதிய 1941/41 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி செயல்வலுவில் இருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 5,
2016, பெப்புருவரி 23.

3-288